## முடிவுரை

குழந்தைகள் மொழித்திறன் பெறவும் மொழி ஆளுமையில் வல்லமை பெறவும் குழந்தைகளின் விருப்பத்தை, தேவையை, எண்ணத்தை நிறைவு செய்யவும் மொழி ஆற்றலானது தேவைப்படுகிறது. குழந்தைகள் பாதுகாப்புடன், அச்சமற்ற சூழலை உருவாக்கிக் கொடுத்து குழந்தைகளின் ஆர்வத்தை அடிப்படையாகக் கொண்டு மொழி கற்பித்தல் வேண்டும். மொழிப்பாடமே பிற பாடங்களுக்கு அடிப்படையாகும். மொழியே அனைத்து வகையான பாடங்களைக் கற்றலும் கற்பித்தலும் மொழி அடிப்படை என்பதால் மொழிக்குப் பின்னால் உள்ள உணர்வுகளைப் புரிந்து கொள்வதன் வாயிலாகப் பாடங்களை எளிதில் புரிந்து கொள்ள இயலும். எல்லா மாணவர்களின் மொழித் திறனைப் பெறும் வகையிலாகப் பிற பாடத்திட்டங்கள் அமைத்தல் வேண்டும். அவ்வாறு அமைப்பதன் மூலமாக சிறந்த புரிதல் நிலையை மாணவர்களுக்கு வழங்க முடியும்.

## துணைநின்றவை


- தண்டபாணி சு., (2015), தமிழ் கற்பிக்கும் முறைகள், **மதுரை:** மீனாப்பதிப்பகம்.
- ஸ்ரீ பாலாஜி லோகநாதன், (2011), கலைத்திட்டமும் கற்பித்தலின் நுட்பங்களும், **சென்னை:** ஸ்ரீ ஜி.வி பப்ளிக்கேசன்ஸ், திருவல்லிக்கேணி.
- அகத்தியலிங்கம், (2002), தமிழ்மொழி அமைப்பியல், **சிதம்பரம்:** மெய்யப்பன் தமிழாய்வகம், 53 புதுத்தெரு .
- இராசாராம் (பதிப்.), (1980), ஒலியியல், **சென்னை:** அனைத்திந்தியத் தமிழ் ஆய்வு மையம், மொழியியற் கழகம்.
- அரும்பு, (2002), ஏழாம் வகுப்பு மாணவர்களின் தமிழ் பயிற்சியில் உள்ள சிக்கலும்

  தீர்வுகளும் - ஓர் ஆய்வு, **தஞ்சாவூர்:** இந்திய மொழிகள் பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம்.


******************

# மனவெழுச்சியும் மாணவர்களின் வளர்ச்சியும்
# EMOTIONS AND STUDENTS GROWTH


### வீ.பூமிநாதன் | V. Boominathan

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), நஞ்சனாபுரம், ஈரோடு - 638 107. அலைபேசி – 9751524368, மின்னஞ்சல் - vboomi@gmail.com, ORCID: https://orcid.org/0000-0002-3150-5672



## ஆய்வுச்சுருக்கம்

மாணவர்களின் மனவெழுச்சியினைக் கண்டறிந்து அதனை வளப்படுத்திக் கற்பிக்கும்போது மாணவர்களின் கற்றல் ஆற்றலானது மிகுகிறது. மாணவர்கள் வளம்பெறும்போது அவர்கள் சார்ந்துள்ள சமூகமும் சமூக விரோதிகள் இன்றிச் சிறந்த சமூகமாக மாறுகிறது.


## Abstract

Students' learning potential is enhanced when their emotions are discovered and enriched. As students prosper, the community on which they depend becomes a better society without social enemies.

திறவுச்சொற்கள் (Keywords): மனவெழுச்சி, மாணவர், வளர்ச்சி, EMOTION, STUDENT, GROWTH

## முன்னுரை

பள்ளி மற்றும் கல்லூரிகளில் கற்றல் கற்பித்தல் என்பது தற்காலச் சூழலில் மிகவும் சவாலான ஒன்றாக உள்ளது. மாணவர்கள் பல்வேறு மனநிலையில் கல்வி நிலையங்களை வந்தடைகின்றனர். அவர்களின் மனநிலைக்கேற்பக் கற்பித்தல் மிகவும் அவசியமான ஒன்றாக உள்ளது. அவ்வாறு கற்பிக்கும் ஆசிரியர்களுக்குக் கல்வி உளவியல் மிகவும் அவசியமான ஒன்றாகவே உள்ளது.

## மனவெழுச்சி

மனவெழுச்சி என்பது உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கும் நனவுநிலையாகும். மாணவர்களின் உணர்ச்சிகளைச் சீர்படுத்துவதன் மூலம் அவர்களின் நடத்தை மற்றும் அறிவினை வளப்படுத்தி வாழ்வில் வெற்றிபெறச் செய்ய முடியும். மாணவர்கள் குடும்பம், கல்வி நிறுவனச் சூழல், உடல் வளர்ச்சி, உடல் நலம், நுண்ணறிவு மற்றும் சமூகம் போன்ற பல்வேறு காரணிகளினால் மனவெழுச்சி பெறுகின்றனர். மனவெழுச்சி நேர்மறையாக அமையும்போது மாணவர்களின் வளர்ச்சியும் நேர்மறையாகவே உள்ளது. ஆனால் எதிர்மறைச் சூழல் அமையும்போது மாணவர்கள் பாதிப்பதோடு சமூகமும் சீர்கெடுகிறது.

*“பொதுவாக மனவெழுச்சி என்பதன் அர்த்தம் 'வெளிப்படுத்து' அவாவைத்தூண்டு என்பதாகும். மனவெழுச்சியானது உயிரியை எழுச்சியுறச் செய்து செயல்களைச் செய்வதற்கு ஊக்குவிக்கின்ற ஓர் உயிருள்ள செயற்பாடு எனலாம். இவ்விதத்தில் தனியாளின் நடத்தைகளுக்கு ஊக்குவிப்பது மனவெழுச்சியே ஆகும். வேறுவிதமாகக் கூறின் மனித நடத்தையின் ஊக்கி மனவெழுச்சியாகும். மனவெழுச்சிகள் ஏதாவது ஒரு தூண்டல் காரணமாக ஏற்படும் ஒருவருடைய பிரதிபலிப்புக்கள் என்று அறிமுகப்படுத்தலாம். அதாவது ஒருவருடைய மனதில் ஏற்படும் உள்ளார்ந்த உணர்வுகளே மனவெழுச்சி. மனவெழுச்சி என்பது உணர்ச்சி என்பதிலும் வேறுபாடானது. இவை தூண்டல்களால் தூண்டப்படும் மனநிலையாகும்.”*

எனவே மனவெழுச்சியானது மாணவர்களின் மனதிற்கு ஏற்ப மாற்றும் தன்மையுடையது என்பதை அறிய முடிகிறது.

## மனவெழுச்சியின் இயல்புகள்

மனவெழுச்சியினைச் சமநிலைப்படுத்துவது அல்லது சூழலுக்கு ஏற்றவாறு உயர்த்தல் அல்லது குறைத்தல் மூலம் ஒருவரை நாம் சாதனையாளராக மாற்ற முடியும். இம்முயற்சியில் ஈடுபடுவதற்குமுன் மனவெழுச்சியின் இயல்புகளை அறிய வேண்டியது அவசியமாகிறது. மனவெழுச்சியின் இயல்புகளாக கி.நாகராஜன் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:

*“மனவெழுச்சிகள் ஒவ்வொரு உயிரியிடத்தும் தோன்றுகின்றன. இவை நடத்தையின் ஊக்கிகளாகவும், நடத்தையின் இலக்குகளாகவும் செயற்படுகின்றன.*

*ஒவ்வொரு மனவெழுச்சியிலும் ஒரு பொருளையோ, ஒரு நிலைமையையோ பற்றித் தீவிர உணர்ச்சி மேம்பட்டிருக்கும். இவ்வுணர்ச்சி இன்பவுணர்ச்சியாகவோ வெறுப்புணர்ச்சியாகவோ இருக்கலாம்.*

*மனவெழுச்சிகள் குழந்தைப் பருவம் முதல் கிழட்டுப் பருவம் வரை எவ்வயதிலும் மனிதரிடம் காணப்படும். எனினும் இவை சிறு குழந்தைகளிடம் பாகுபடாத நிலையில் காணப்படும்.*

*ஒருவனைச் சிந்திக்க வைப்பதைவிட அவனிடம் பல்வேறு மனவெழுச்சிகளைத் தோற்றுவிப்பது மிகவும் எளிது.*

*ஆராய்ந்து சிந்திக்கும் திறனை மனவெழுச்சிகள் தடைசெய்யக் கூடியவை. இவை கற்றலையும் பெரிதும் பாதிக்கின்றன.*

*குறிப்பிட்ட மனவெழுச்சியைப் பல்வேறு தூண்டல்கள் மூலம் எழுப்ப முடியும்.*

*மனவெழுச்சிகளும், அவை வெளிப்படும் விதமும், ஆளுக்கு ஆள் மாறுபடுகின்றன.*

*ஒவ்வொரு மனவெழுச்சியும் பல நிலைகளைக் கொண்டது. உதாரணமாக சினம் என்னும் மனவெழுச்சி 'சிறு எரிச்சல்' (Mild irritation) முதல் பெருங்கோபம் (Rage) வரையிலான பல நிலைகளைத் தன்னுள் அடக்கியதாகும்.*

*ஒரு மனவெழுச்சி, அது எழுவதற்கான காரணம் மறைந்த பின்னரும் தொடர்ந்து செயற்படுகிறது. இதனை 'மனவெழுச்சி நீட்சி' (Mood) எனலாம். வீட்டிலே ஏதோவொரு காரணத்துக்காகச் சினம் கொண்ட ஆசிரியர் பள்ளிக்கு வந்தபின்பும் சிலபோது அந்நிலையிலேயே தொடர்ந்து காணப்பட்டு, மாணவர்களிடம் தனது எரிச்சலை வெளிப்படுத்தக் கூடும்.*

*மனவெழுச்சிக்கு உட்பட்டவனது உடல்நிலையில் பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இம்மாற்றங்களைக் குறிப்பாக அச்சம், சினம் போன்ற எதிர்மறை மனவெழுச்சிகளில் காணக்கூடும்."*[2]

மேற்கண்ட மனவெழுச்சிகளின் இயல்புகளை ஆராயும்போது மாணவர்களின் மனவெழுச்சியை ஒருமுகப்படுத்தல் அல்லது நேர்மறையான திசையில் திருப்புதல் மூலம் அம்மாணவனைச் சாதனையாளனாக மாற்ற முடியும் என்பதை அறிய முடிகிறது. மேலும் ஒரு மாணவன் எத்துறையில் ஆர்வமாக இருக்கிறான் என்பதை ஆராய்ந்து அத்துறையின் நேர்மறை எண்ணங்களை அறிவுறுத்தும்போது அம்மாணவன் அத்துறையில் வெற்றியாளனாகத் திகழ வாய்ப்பு ஏற்படுகிறது.

### மனவெழுச்சி பற்றிய உளவியல் கொள்கைகள் (Theories of Emotions)

மனவெழுச்சியுடன் மகிழ்ச்சி, மகிழ்ச்சியின்மை போன்ற உணர்ச்சிகளும், உடல் மாற்றங்களும் ஏற்படுகின்றன என அறிந்தோம். இவற்றுள் எது முந்தியது, எது பின் வருகிறது என்பது பற்றிச் சில கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. மனவெழுச்சித் தூண்டல், உணர்ச்சியைத் தோற்றுவித்து இதன் விளைவாகச் சில உடல்மாற்றங்கள் எழுகின்றன எனப் பொதுவாக நாம் எண்ணுகிறோம். ஆனால் ஜேம்ஸ் – லாங் (James-Lange) கொள்கையின்படி *"மனவெழுச்சியைத் தூண்டக்கூடிய நிலைமை ஏற்பட்டவுடன் எழுவது உடல்நிலை மாற்றங்களாகும். இவ்வுடல்நிலை மாற்றங்களை மனம் உணர்வதன் மூலம் தோன்றுவது உணர்ச்சியாகும். இக்கொள்கையின்படி, மனவெழுச்சிகளில் முதலிடம் பெறுவது உடல்நிலை மாற்றங்களே. இம்மாற்றங்கள் இல்லையேல் மனவெழுச்சிகளில் அமைந்துள்ள தனிப்பட்ட உணர்ச்சிகள் ஏற்படா. தம்*

*கொள்கைக்கும் பாமர மக்களின் கருத்துக்கும் உள்ள வேறுபாட்டைப்பற்றி ஜேம்ஸ் கூறுவது ஈண்டு கவனிக்கத்தக்கது. நாம் செல்வத்தை இழக்கிறோம்; வருத்தம் ஏற்படுகிறது; அழுகிறோம்; ஒரு கரடியைச் சந்திக்கிறோம்; அச்சம் ஏற்படுகிறது; ஆதலால், நடுங்கி ஓடத் தொடங்குகிறோம். ஒருவன் நம்மைத் தூற்றுகிறான்; சினம் பொங்குகிறது. அவனை நாம் அடிக்கிறோம். இவ்வாறு பாமர மக்கள் எண்ணுகின்றனர்; இது தவறு. உண்மையில் நாம் அழுவதனால்தான் வருத்தமடைகிறோம். நடுங்குவதால்தான் அச்சமுறுகிறோம்; அடிப்பதால்தான் சினத்தை அனுபவிக்கிறோம். இவ்வுடல் நிலைகள் இல்லாதிருப்பின் மனவெழுச்சிகள் ஏற்படமாட்டா"* [3] என்கிறார் ஜேம்ஸ். ஜேம்ஸின் கருத்தினை நோக்கும்போது மனவெழுச்சியானது முதலில் உடலையும் பிறகுதான் மனதையும் பாதிக்கிறது என்பதை அறிய முடிகிறது. எனவே மாணவர்களின் உடநலத்தினைச் சீர்படுத்துவதன் மூலம் உள்ளத்தையும் சீர்படுத்த முடியும் என்பதை ஆசிரியர்கள் உணர வேண்டியுள்ளது.

## மனவெழுச்சியின் பல்வேறு பிரிவுகள்

ஹெரால்டு ஷால்ஸ்பர்க் (Herald Schlosberg) என்பாரது கருத்துப்படி மனவெழுச்சிகள் மூன்று பரிமாணங்களில் பரவிக் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் இருமுனைகளை (Bipolar) கொண்டவை:

I. மகிழ்ச்சி – மகிழ்ச்சியின்மை
II. கவனித்தல் – புறக்கணித்தல்
III. செயலுறுநிலை – செயலற்ற நிலை

இம்மூன்றுடன் நான்காவதாக எளிமை, சிக்கல் என்னும் பரிமாணமும் இன்று குறிப்பிடப்படுகிறது. இப்பரிமாணங்களை மனவெழுச்சிகளோடு பொருத்திப் பல்வகை மனவெழுச்சிகளை அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். இவையாவன:

- அடிப்படை மனவெழுச்சிகள் (சினம், மகிழ்ச்சி, துயரம், அச்சம்)
- புலன் உணர்ச்சிகளால் தூண்டப்படும் மனவெழுச்சிகள் (வலி, அருவருப்பு, உற்சாகம்)
- தற்கருத்து, அவாவுநிலை ஆகியவையுடன் இணைந்தவை (பெருமிதம், அவமானம்,குற்ற உணர்வு போன்றவை)
- பிறரைச்சார்ந்து எழும் மனவெழுச்சிகள் (அன்பு, பொறாமை, பரிதாபம் போன்றவை)
- ஆச்சரியம், மரியாதை போன்ற பாராட்டுத் தொடர்பான மனவெழுச்சிகள்.

இவ்வாறு மனவெழுச்சி பொது நிலையிலிருந்து வளர்ச்சி பெற்றுக் குமரப்பருவத்தை அடையும் முன்னரே பல கிளைகளாக உருப்பெறுகின்றன.

மனவெழுச்சிகளைக் கண்டறிந்து அதற்கு ஏற்றவாறு மாணவர்களின் உணர்ச்சிகளைத் தூண்ட அவர்களின் முழு வரலாறு அறிவது மிகவும் அவசியமாகும். மாணவர்களின் வரலாற்றினை அறிய தனியாள் ஆய்வுமுறை என்ற உளவியல் முறையைக் கையாளுவது ஏற்றதாகும்.

## தனியாள் ஆய்வுமுறை

மாணவர்களின் வரலாற்றினை அறிவதற்குப் பெரும்பாலும் ஆசிரியர்கள் கையாளும் உளவியல்முறை தனியாள் ஆய்வுமுறையாகும். பல்வேறு உளவியல் அறிஞர்களும் இம்முறையினையே பரிந்துரை செய்கின்றனர்.

## தனியாள் ஆய்வின் பொருள்

*"தனியாள் ஆய்வுமுறை என்பது கல்வி நிகழ்ச்சிகளில் தற்செயலான தொடர்புகளைப் பற்றி ஆய்வு செய்யும் ஒரு முறையாகும். இது ஒரு பிரச்சனையைப் பற்றிய ஆழ்ந்த ஆய்வாகும். ஒரு குழந்தையைப் பற்றி, ஒரு சமுதாயத்தைப் பற்றி, ஒரு இனத்தைப் பற்றி, ஒரு நாட்டைப் பற்றி, ஒரு குடும்பத்தைப் பற்றி, ஒரு மன்றத்தைப் பற்றி, ஒரு வாலிபக் குழுவைப் பற்றிய ஆய்வாகும்."*[4]

தனியாள் ஆய்வு என்பது ஒருவனது நடத்தையின் பின்னமைந்த காரணிகளைக் கண்டுபிடிப்பதற்காக அவனைப் பற்றிய எல்லா விவரங்களையும் முழுமையாகத் திரட்டித் தொகுத்து ஆய்தலாகும்.

## தனியாள் ஆய்வு நோக்கம்

தனியாள் பிரச்சனை ஆய்வு அல்லது பிரச்சனை வரலாற்றின் நோக்கமானது ஒரு குழந்தையைப் பற்றி, ஒரு நபரைப் பற்றி, ஒரு பகுதியைப் பற்றி, ஒரு பாடத்தைப் பற்றி, ஆழமாக புரிந்து கொள்ளுதல் ஆகும். ஒரு குழந்தையின் நடத்தையைப் பற்றி முற்றிலுமாக தெரிந்து கொள்வதற்கு அந்தக் குழந்தையின் இன்றைய நிலைமை, அதன் முன் அனுபவம், அதனுடைய சுற்றுப்புறம், அதற்குச் சம்பந்தப்பட்ட காரணிகள் அடங்கிய செய்திக் குறிப்புகள் சேகரிக்கப்படுகின்றன. உதாரணமாக, பள்ளி மாணவர் சிலரிடம் காணப்படும் நெறிபிறழ்வு, பாடங்களில் பின்தங்கியிருத்தல், பள்ளிக்குக் காலந்தாழ்ந்து வருதல், கவனமின்மை, மற்ற மாணவர்களிடத்துச் சேராது ஒதுங்கியிருத்தல், அதிகமாகப் பொய்பேசுதல், பணிவின்மை போன்றவற்றின் அடிப்படைக் காரணங்களை அறிய இம்முறை உதவுகிறது.

## தனியாள் ஆய்வுப் படிநிலைகள்

- நேரிடையான உற்றுநோக்குதல் அல்லது அளவீடு மூலம் ஆய்வில் இருக்கின்ற பிரச்சனையின் இயல்பைத் தீர்மானித்தல்.
- பிரச்சனையில் நடக்கக் கூடியவை எனக் கருதும் முந்தைய நிகழ்ச்சிகளைப் பற்றித் தீர்மானித்தல்.
- தற்காலிகமாக யூகம் செய்யும் கருத்தை எடுத்துரைத்தல் அல்லது இது போன்ற பிரச்சனைகளின் மூலம் கிடைத்த அறிவால் தற்காலிக கருத்துக்களின் வரிசைகளை விளக்குதல்.
- தற்காலிக யூகக் கருத்தைச் சரிபார்த்தல்.
- தவறான நடத்தைக்குரிய காரணங்களை நீக்குவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளுதல்.
- சரிபார்த்தல் மற்றும் பின் தொடர்தல் (Follow-up).

## தனியாள் ஆய்வுமுறையின் சிறப்பியல்புகள்

- செய்திக் குறிப்புகள் முழுமையாக இருக்க வேண்டும்.
- செய்திக் குறிப்புகள் நியாயமாக இருக்க வேண்டும்.
- பதிவு அல்லது குறிப்பை மிகவும் ரகசியமாக வைத்திருக்க வேண்டும்.

- செய்திக் குறிப்புகளின் தொகுப்பு அறிவியல்பூர்வமாக இருக்க வேண்டும்.

**தனியாள் ஆய்வுமுறையில் சேகரிக்கப்பட வேண்டிய செய்திக் குறிப்புகளின் வகைகள்**

ஒரு குழந்தையின் பிரச்சனை பற்றிய ஆய்விற்குக் கீழ்க்கண்ட விவரங்களைச் சேகரிக்க வேண்டும்.

**அடையாளக் குறிப்புகள்**

பெயர், பால், வயது, பிறந்த தேதி, தந்தை பெயர், தாய் பெயர், முகவரி.

**பிரச்சனையின் பெயர்**

எத்தகைய பிரச்சனை? பிரச்சனையின் தன்மை என்ன?

**குடும்ப வரலாறு**

- தந்தையின் கல்வித் தகுதி, தொழில், வருமானம்
- தாயின் கல்வித் தகுதி, தொழில், வருமானம்
- குழந்தைகளுக்கிடையே உள்ள உறவு முறைகள்
- வீட்டின் நிலைமை
- வீட்டின் கட்டுப்பாடு அல்லது ஒழுக்கம்

**பள்ளி வரலாறு**

மாணவர் பயின்ற பள்ளிகள், பள்ளியில் சேரும்போது அவர் வயது, பள்ளியைப் பற்றியும், ஆசிரியர்களைப் பற்றியும், பாடங்களைப் பற்றியும் அவரது மனப்பான்மை.

**உடல் மற்றும் ஆரோக்கியத்தைப் பற்றிய வரலாறு**

எந்த வயதில் நடந்தார்? எந்த வயதில் பேசினார்? புலன் குறைபாடுகள், பேச்சுக் குறைபாடு, நோய்வாய்ப்படுதல் முதலியன.

**சமூக வரலாறும் தொடர்புகளும்**

மதப்பின்னணி, சமூக, கலாச்சார, அரசியல், குழு இணைவு நடவடிக்கைகளில் அவரது ஈடுபாடு முதலியன.

**பொழுதுபோக்கு ஆர்வங்கள்**

ஓய்வுநேர வேலைகள், செயல்கள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், பிற செயல்களில் ஆர்வங்கள் முதலியன.

**ஆளுமைக் குணங்கள்**

மகிழ்ச்சி அல்லது மகிழ்ச்சியின்மை, எதிர்பாலரைப் (Opposite sex) பற்றிய கருத்து, மனவெழுச்சியின் முதிர்ச்சி போன்றவை ஆளுமைக் குணங்களாகும். முடிந்த அளவு செய்திகளைப் பல ஆதாரங்களிலிருந்து சேகரிக்க வேண்டும். அதிகப்படியான உபகரணங்களைச் சேகரிக்க பயன்படுத்தவேண்டும். இவைகளில் பள்ளிக் குறிப்புகள்,

குழந்தையிடம் நடத்திய பேட்டி, பெற்றோர் மற்றும் அடுத்தவர்களிடம் நடத்திய பேட்டியும் அடங்கும்.

**தனியாள் ஆய்வுமுறையின் நிறைகள்**

- ஒவ்வொரு புதிய மாணவரைப் பற்றியும் ஆசிரியர் அதிகமாக தெரிந்து வைத்திருக்க முடியும்.
- படிப்பில் ஒவ்வொரு மாணவரின் பலமும், பலவீனமும் பற்றி அறிய முடியும்.
- சொந்த, சமூக ரீதியில் ஒத்துப்போகும் பிரச்சனைகளைப்பற்றி அறிய இயலும்.
- மாணவனது மனப்பான்மை, விருப்பம் மற்றும் நாட்டம் ஆகியன ஆசிரியருக்குத் தெரிய வருகின்றது.
- தனியாள் ஆய்வின் மூலம் மாணவர்களின் வரலாற்றினை ஆராய்ந்து அவர்களின் மன மற்றும் உடல்நிலைக்கு ஏற்ப உணர்வுகளைத் தூண்டும்போது மாணவர்கள் வெற்றியாளர்களாக மாறுகின்றனர். எனவே தனியாள் ஆய்வுமுறை என்பது மாணவர்களின் வளர்ச்சிக்கு மிக அவசியமான ஒன்றாக அமைகிறது.

**மனவெழுச்சியின் பயன்கள்**

மனவெழுச்சிகளினின்றும் மனிதன் பலவகைப்பட்ட பயன்களைப் பெறுகிறான்.

- மனிதனது செயல்களை ஊக்குவிப்பதற்கும், அவற்றைத் திசைப்படுத்துவதற்கும் மனவெழுச்சிகள் காரணிகளாக அமைகின்றன. மனத்திற்கு இன்பமும் மகிழ்ச்சியும் அளிக்கவல்ல செயல்களைச் செய்யத் துடிப்பதும், அச்சத்தையும் அருவருப்பையும் அளிக்கக் கூடியனவற்றை ஒதுக்கித் தள்ளுவதும் மனித இயல்பாகும்.
- மனித வாழ்க்கைக்குச் சுவையூட்டுபவை இம்மனவெழுச்சிகளேயாம். இன்ப துன்பங்கள் ஓரளவேனும் கலந்து இடம்பெறாத வாழ்க்கை சலிப்பைத் தருவதாக அமையுமேயன்றி, கவர்ச்சியுள்ளதாக அமையாது.
- இலக்கியத் திறனையும், நுண்கலைகளையும் ரசித்தல் மனவெழுச்சிகளின் துணைகொண்டு நிகழும் செயலேயாகும்.
- ஒருவன் தீவிரமாகச் செயலாற்றத் தேவைப்படும் அதிகப்படியான வலுவை அவனது மனவெழுச்சிகள் திரட்டித் தருகின்றன. சாதாரண நிலைகளில் தன்னால் செய்ய முடியாதவற்றை சில நெருக்கடியான நிலைகளில் செய்து முடிக்கத் தேவைப்படும் துணிவையும், சக்தியையும் மனவெழுச்சிகள் தரவல்லன.
- சமூக நல்வாழ்விற்கும் மனவெழுச்சிகள் அடிப்படைகளாகின்றன. பரிவு, அன்பு, பாசம் போன்ற மனவெழுச்சிகளே மனிதனது கூட்டு வாழ்க்கை நன்கு இயங்க உதவுகின்றன. சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், குறைபாடுகள் ஆகியவை மீது சீற்றம் கொண்டு, அவற்றினைக் களைந்து சமுதயாத்தைச் சீர்திருத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கும், சமூகப்பற்று, நாட்டுப்பற்று போன்றனவற்றிற்கும் மனவெழுச்சிகளே காரணங்களாகும்.
- மாணாக்கர்களது பள்ளி வாழ்க்கையிலும், அவர்கள் தங்களது ஆசிரியர்கள்பால் கொண்டுள்ள தொடர்பின் தன்மையிலும், மனவெழுச்சிகளின் செல்வாக்கினை நாம் காணக்கூடும். வெற்றிக்கு வாய்ப்பினைத் தரவல்ல பள்ளிப் பாடங்களையும் செயல்களையும் மாணாக்கர் மகிழ்ச்சியுடன் விரும்பிக் கற்கின்றனர். தோல்வியையும் மனமுறிவையும் அளிக்கும் பாடங்களையும் செயல்களையும் சினந்து வெறுக்கின்றனர். மேலும், வகுப்பில் நிலவும் சூழ்நிலை மகிழ்ச்சியூட்டக் கூடியதாயின் கற்றல் நன்கு நடைபெறும்; ஆசிரியரின் எதேச்சதிகார

மனப்பான்மையால் வகுப்புச் சூழ்நிலை அச்சமும் சினமும் நிறைந்திருக்குமாயின் கற்றல்) தடைபடும்.

- தமது தொழிலில் வெற்றி காணவும், தமது மாணாக்கரோடு சீரான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் ஆசிரியரிடம் மனவெழுச்சிகளின் சமநிலையும் கட்டுப்பாடும் இருத்தல் இன்றியமையாததாகும்.
- மனவெழுச்சிகள் கட்டுக்கடங்காமற் போயின் மனவெழுச்சிப் போராட்டங்கள் (Emotional Conflicts) எழக்கூடும். பல்வேறு நெறிபிறழ்ந்த, அசாதாரண (Abnormal) நடத்தைக் கோலங்களுக்கு இவையே காரணிகளாக அமைகின்றன என்று உளவியலார் கருதுகின்றனர்.

மாணவர்களே ஒரு நாட்டின் வளச்சியைத் தீர்மானிக்கின்றனர். எனவே வளமான மாணவர்களைப் பெறும் நாடு வளமுடையதாக திகழ்கிறது. எனவே ஒவ்வொரு நாடும் மாணவர்களின் மீது அக்கறை கொள்ள வேண்டும். இக்கால மாணவர்கள் பல்வேறு காரணங்களால் பல உளவியல் சிக்கலுக்கு ஆட்படுகின்றனர். எனவே அவர்களின் உளவியல் சிக்கலைக் கண்டறிந்து அவற்றை நீக்கும்போது மாணவர்கள் வாழ்வில் சாதனையாளர்களாகவும் வெற்றியாளர்களாகவும் திகழ்கின்றனர்.

தனியாள் ஆய்வுமுறை மூலம் மாணவர்களின் வரலாற்றினை ஆராய்ந்து அறிய ஆசிரியர் மாணவர்களின் விகிதம் என்பது நமது நாட்டில் குறைவாக உள்ளது. இந்த விகிதம் என்பது தனியாள் ஆய்வுமுறைக்குப் பற்றாக்குறையாக உள்ளது. எனவே ஆசிரியரின் விகிதத்தினை உயர்த்தினால் மேற்கண்ட முறையில் வெற்றியடைய முடியும்.

## அடிக்குறிப்பு

1. South Eastern University Arts Research Session – 2016
2. Nagarajan.K, (2007) Education Psychology, Chennai, Ram Publication, Pp. 70-71
3. Nagarajan.K, (2007) Education Psychology, Chennai, Ram Publication, P.73.
4. Meenachi Sundram.A, (2015), Learner and Learning Psychology, Dindigul, Kavyamala Publication, P.18.

*****************